அறுவை சிகிச்சை மூலமாக இந்தக் காச நோயை முற்றிய நிலையிலும் குணப் படுத்த முடியும் என்று சொல்லப்படுகிறது. அறுவை சிகிச்சை மூலம் உண்மை யிலேயே காற்றுப்பையிலே ஏற்படும் நோயை சிகிச்சை செய்யலாம் என்ற கருத்து இருக்கிறது. அதிலே சிறந்தவர்கள் மருத்துவ மனைகள் பலவற்றில் இருக்கிறார்கள். அறுவை சிகிச்சை மூலம் பூர்ண குணம் ஏற்படுத்த முடியும் என்று நம்பப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, வீடுகளிலிருந்து கொண்டு டாமிஸிலரி டிரீட்மெண்ட் கொடுக்கப்படுகிறவர்களுக்கு உணவுக்கு ஒரு தொகை கொடுக்கப்படுகிறது. அது எவ்வளவு என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏறத்தாழ 20 காசு அல்லது 25 காசு, அளவுக்கு சிறு உதவித் தொகை தரப்படுகிறது நான்கு நாட்களுக்கு ஒரு தரம் வந்து மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தவறிவிடாமல் இருப்பதற்காக கொடுக்கப்படுகின்ற ஊக்குவிக்கின்ற தொகை ஆகும் இது.

திரு. ஜே. ஜேம்ஸ்: காச நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பதோடு சத்துணவு கொடுப்பது அந்த நோய் குணமாவதற்கு அவசியம் என்று கருதப் படுவதால் வீடுகளிலிருந்துகொண்டு சிகிச்சை பெறுகிறவர்களுக்கு, அப்படிப் பட்ட காசநோயாளிகள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பதால், அவர்கள் சத்துணவு வாங்கிச் சாப்பிடுவதற்குப் பண உதவி கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதிலே சிறு தொகை உதவி செய்யப் படுகிறது. ஏழைகள், அவர்களால் எந்தவிதத்திலும் சத்துணவுகூட பெற முடியாத நிலையிலிருப்பவர்களில் அதற்காக விண்ணப்பித்துக் கொண்டவர் களுக்கு மாதம் ரூ. 20 அளவுக்கு டி.பி. அசோசியேஷன் உதவி செய்வதற்கு ஒரு முறை இருக்கிறது. அம்முறைப்படி 100, 150 விண்ணப்பதாரர்களுக்கு மாதந்தோறும் ரூ. 20 வழங்கப்படுகிறது. வீடுகளிலிருந்து மருந்துகள் வாங்கு வதற்காக வந்து போவதற்கு ஒரு ஊக்கத் தொகை கொடுப்பது என்ற ஒரு பழக்கமும் இருக்கிறது. 20, 25 காசு கொடுப்பது என்ற ஒரு முறை இருக் கிறது என்று நம்புகிறேன். ஒரு முட்டை வாங்கும் அளவுக்கு உதவி இருக்கும். சரியான விவரம் நான் இப்பொழுது தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்வி கேட்கவேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: காச நோயைத் தடுத்து நிறுத்த ஆங்கில வைத்திய முறை சரியானதா அல்லது சித்த வைத்திய முறை சரியானதா?